# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
**<u>தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,</u>**
**<u>அவர்கள் முன்பாக</u>**

************

முறையீட்டு மனு எண். 0347/2015

ஆணை எண். 73 /2016

நாள்: 16 / 04 /2016

திரு.T,ஆறுமுகம்,
எண்.103, பெரிய தெரு,
குன்றத்தூர், சென்னை–600 069
காஞ்சிபுரம் மாவட்டம். — மனுதாரர்

செயல் அலுவலர்,
குன்றத்தூர் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம். — எதிர் மனுதாரர்

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் பேரூராட்சியைச் சேர்ந்த திரு.ஆறுமுகம் என்பவரிடமிருந்து பெறப்பட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் 30.12.2015 அன்று பெறப்பட்டு 0347/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## ஆணை

மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் மீது கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

1. தனது வீட்டில் குடிநீர் இல்லாத காரணத்தாலும், தனது மனைப்பகுதி 629 சதுர அடியில் உள்ள இடத்தில் நீர்பிடிப்பு இல்லாத காரணத்தாலும் வீட்டின் வெளிபுரம் சாலை ஓரத்தில் போர் போடும் வேலையை செயல் அலுவலர் தடுத்து நிறுத்தி விட்டார்.

2. புதியதாக கட்டிய வீட்டிற்கு படிகட்டு கட்டிய போது வேலையை செயல் அலுவலர் நிறுத்திவிட்டார்,

3. தனது வீட்டின் மனை அளவு 629 சதுர அடி அப்ரூவல் கேட்டு மனு செய்ததற்கு அனுமதி வழங்கமுடியாது என செயல் அலுவலர் தெரிவித்தார் என தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

4. மேலும் குடிநீர் இணைப்பு கேட்டு அனுமதி மனுவினை மறுத்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இப்புகார் மனு மீது குன்றத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டது. செயல் அலுவலர் 25.01.2016 நாளிட்ட விளக்க அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். புகார் மனு மீது செயல் அலுவலர் குன்றத்தூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பெரிய தெருவில் பேரூராட்சியின் அனுமதியின்றி சாலையில் ஆழ்துளை கிணறு மற்றும் 3 அடிக்கு மேல் பேரூராட்சி சாலையில் படிகட்டு கட்டியதால் அனுமதியற்ற ஆழ்துளை கிணறு மற்றும் பேரூராட்சியின் சாலையில் படிக்கட்டு கட்டுவதை நிறுத்த பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது எனவும் , பேரூராட்சி சாலையில் அமைக்கப்பட்ட படிகட்டை இடித்து அப்புறப்படுத்தப்பட்டது எனவும், இப்பேரூராட்சியில் வழங்கப்படும் கட்டிட உரிமங்களை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் தொழில் நுட்ப பணியாளர்களை நியமனம் செய்யப்பட்டு கட்டிடம் கட்ட கோரும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்யப்பட்டு பின்னர் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரர் கூறியவாறு குடிநீர் இணைப்பு கோரி எவரும் விண்ணப்பிக்கவில்லை. இப்பேரூராட்சி மூலம் 07.05.2012 –ல் கடைசியாக குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் , ஆகையால் மனுதாரர் பேரூராட்சிக்கு சொந்தமான சாலையில் போர் அமைத்ததை நிறுத்தப்பட்டு, கால்வாயிலிருந்து 3 அடிக்கு மேல் பேரூராட்சி சாலையில் படிகட்டு கட்டியதை பேரூராட்சி பணியாளர்கள் கொண்டு அப்புறப்படுத்தப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய மனுதாரர் முறையீடு புகார் மனு மற்றும் அம்மனு மீது பெறப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசீலனைக்குப் பின் செயல் அலுவலர் மற்றும் மனுதாரர் ஆகியோரை நேரில் விசாரிக்கப்பட உரிய அழைப்பாணை அனுப்பப்பட்டது.

முறையீட்டு மனுதாரரின் வாக்கு மூலம் பின்வருமாறு.

*"எனது வீடு 629 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது. வீட்டினுள் குடிநீர் வசதி இல்லை. வீட்டின் வெளிபுறத்தில் சாலையோரத்தில் போர் போட ஆரம்பித்த சமயத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.முனியாண்டி மற்றும் பேரூராட்சி ஊழியர் திரு. வெற்றி, திரு. கிருஷ்ணா ராமு ஆகியோர் போர் போடும் வேலையை நிறுத்தி விட்டார்கள். தரக்குறைவாகவும் பேசினார்கள். வீட்டிற்குள் போர் போட வேண்டுமானாலும் எங்களை கேட்காமல் போடக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். வீட்டுக்கு வெளியே சுமார் 100 பேர் போர் போட்டுள்ளனர். அவர்களை எதுவும் செய்யவில்லை. இதுகுறித்து முதலமைச்சர் தனிப்பிரிவு, மாவட்ட ஆட்சியர் , பேரூராட்சி இயக்குநர் போன்றோருக்கு மனு செய்துள்ளேன். எனது தெருவில் என்னை தடுத்த 15 நாட்கள் கழித்து திரு.பா.சந்திரசேகரன் என்பவர் போர் போட்டுள்ளார். 100க்கும் மேற்பட்டோர்கள் வீட்டு வெளியே பேரூராட்சி சிமெண்ட் சாலையில் போர் போட்டுள்ளார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்".*

*குன்றத்தூர் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர்* திரு.பொ.முனியாண்டி *என்பவரது வாக்கு மூலம்*

*மனுதாரர் வீட்டின் முன்பாக பேரூராட்சியின் ரோட்டில் ஆழ்துளை கிணறு பணி நடைபெற்றது. அச்சமயத்தில் தமிழகத்தில் ஆழ்துளை கிணற்றில் இரண்டு குழந்தைகள் இறந்து விட்டதால் தமிழக அரசும் உச்ச நீதிமன்றமும் இவ்வாறு ஆழ்துளை கிணறுகள் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற வேண்டும் என ஆணையிட்டது. அது சமயம் பொது மக்களுக்கும் அறிவிப்பு செய்யப்பட்டது. மனுதாரரின் தெருவில் புகழ்பெற்ற திருநாகேஸ்வரம் கோயில் அமைந்துள்ளதால் சுவாமி ஊர்வலம் நடைபெறும். இதனால் அவர் வீட்டின் முன் ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள படிக்கட்டை கழிவுநீர் கால்வாய் உட்புறமாக அமைக்குமாறு அவருக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் அவர் அமைந்துள்ள பகுதியில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளாக உள்ளதால் 90 சதுர மீட்டருக்கு குறைவாக உள்ள மனைகளுக்கு பெரு நகர வளர்ச்சி குழுமத்தால் பரிசீலனை செய்யப்பட்டு கட்டிட உரிமம் வழங்கப்படுகிறது. மேலும் பேரூராட்சி மூலம் 07.05.2015 பிறகு குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை.*

*குன்றத்தூர் பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் திரு.* வெ.கணேசன் *என்பவரது வாக்குமூலம்*

*குன்றத்தூர் பேரூராட்சியில் முறையீட்டு மனுதாரரின் வீட்டின் வெளிப்புறம் ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு அரசு ஆணை மற்றும் உச்ச நீதிமன்ற ஆணைப்படியும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அனுமதி பெற வேண்டும் என்று பொதுமக்களுக்கு அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் வீட்டிற்கு செல்லும் படிகட்டு கழிவுநீர் கால்வாய்க்கு உட்புறமாக அமைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. 90 சதுர மீட்டருக்கு குறைவாக உள்ள மனைகளுக்கு கட்டிட அனுமதி வழங்க விதிமுறைகளில் வழி வகை இல்லை. குடிநீர் இணைப்பு வழங்க கோரும் மனுக்கள் பெறப்பட்டுள்ளது .*

இந்நிலையில் மனுதாரரின் முறையீடு மனு மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணை, செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவைகளை பரிசீலனை செய்ததில் மனுதாரர் கூறியவாறு பேரூராட்சிக்கு சொந்தமான சாலையில் ஆழ்துளை கிணறு வேலை நிறுத்தப்பட்டதும் , பேரூராட்சி சாலையில் படிகட்டு கட்டியதை அப்புறப்படுத்தியதும் 90 சதுர மீட்டருக்கு குறைவாக உள்ள மனுதாரரின் மனைக்கு கட்டிட அனுமதி வழங்காததற்கும் மனுதாரரின் முறையீட்டு மனுவில் கூறியுள்ளவாறு விதிமுறைகளுக்கு முரணான செயல்கள் ஏதும் இல்லை எனக் கருதி முறையீட்டு மனு தள்ளுபடி செய்து முறைமன்றம் ஆணையிடுகிறது.

2016ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்ஆணை இடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலருக்காக.

பெறுநர்:

1. திரு.ஆறுமுகம்,
   எண்.103, பெரிய தெரு,
   குன்றத்தூர், சென்னை–600 069
   காஞ்சிபுரம் மாவட்டம்.

2. திரு. வெ.கணேசன்
   தற்போதைய செயல் அலுவலர்,
   குன்றத்தூர் பேரூராட்சி, சென்னை–600 069
   காஞ்சிபுரம் மாவட்டம்.

3. முந்தைய செயல் அலுவலர்,
   குன்றத்தூர் பேரூராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம்.
   (தற்போது பணிபுரியும் இடம். திரு.பொ.முனியாண்டி,
   சிட்லபாக்கம் தேர்வுநிலை பேரூராட்சி, சென்னை–600 064